TNTT080002062021

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., L.L.M.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
திருவள்ளுவராண்டு 2057–ம் வருடம் வைகாசி திங்கள் 25ம் நாள் திங்கட்கிழமை
2026ம் ஆண்டு ஜுன் மாதம் 08 ஆம் நாள் திங்கட்கிழமை
அசல் வழக்கு எண்.136/2021
(CNR.No.TNTT-08-000206-2021)

1.பொன்னம்மாள்
2.எஸ்தர்
3.புஸ்பா
4.ஜோசப் ... வாதிகள்

..எதிர்..

1.ஞானபுஸ்பம்(இறப்பு)
2.கோயில்பிள்ளை
3.கிறிஸ்டி
4.ஹெர்லின் ராணி
5.ஜோயல் பிரசன்னா ... பிரதிவாதிகள்

(இடைநிலை மனு எண்.11/2024 ல் 13.10.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் 2 முதல் 5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக கட்சி சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தெ.வெங்கடாசலபதி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2, 3ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ராம்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 4, 5ம் பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்கள் ஆகியுள்ள நிலையிலும், இருதரப்பு வாதவுரை கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:00:50 +0530

பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (08.06.2026) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்....

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் வாதிகளுக்குரிய 1/2 பாகத்தை பிரித்து ஒதுக்கீடு செய்து வாதிக்கு தரக் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரை சுருக்கம்**

அ) நஞ்சை நிலமான 72 செண்ட் விஸ்தீரணம் கொண்ட தபசில் சொத்தில் 58 செண்ட் நிலம் ஆதியில் 30.09.1970 ம் தேதிய நன்கொடை ஆவணம் மூலமும், மீதமுள்ள 14 செண்ட் வாரிசு அடிப்படையில் தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டு எவ்வித வில்லங்கமின்றி சர்வ சுதந்திரமாக அனுபவித்து வந்த நிலையில், தேனம்மாள் மகனான மாசிலாமணி மற்றும் 1 ம் பிரதிவாதியான மகள் ஞானபுஸ்பம் அம்மாள் ஆகியோரை வாரிசுகளாக விட்டு விட்டு எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் 20.09.2005 ல் இறந்துவிட்டார். தேனாம்மாளின் கணவர் யோசேப்பு 1984 ல் இறந்துவிட்டார். அவரது இறப்பு சான்று 1 ம் பிரதிவாதியின் வசம் உள்ளது.

ஆ)தேனம்மாளின் இறப்பிற்கு பின்னர் அவருடைய வாரிசுகளான மாசிலாமணி, 1 ம் பிரதிவாதி ஆகியோர் தபசில் சொத்தை வாரிசு நிலைமையில் அடைந்து கூட்டாக அனுபவித்து வந்தனர். தபசில் சொத்தில் மாசிலாமணிக்கு பிரிவின்றி பாதி பாகமும் 1 ம் பிரதிவாதிக்கு பிரிவின்றி பாதி பாகமும் கூட்டாக பாத்தியப்பட்டு கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது. மாசிலாமணி வாதிகளான அவரது மனைவி பொன்னம்மாள், மக்களான எஸ்தர், புஸ்பா, ஜோசப் ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் 05.07.2000 ல் இறந்துவிட்டார். தபசில் சொத்தில் மாசிலாமணிக்கு பாத்தியப்பட்ட பிரிவின்றி பாதி பாகத்தினை வாதிகள் வாரிசு நிலைமையில் பாத்தியம் அடைந்து பிரிவினை செய்யாமல் 1 ம் பிரதிவாதியுடன் கூட்டாக அனுபவித்து வருகின்றனர்.

இ)தபசில் சொத்தினை பிரிவினை செய்து கொடுக்கும்படி வாதிகள் அடிக்கடி 1 ம்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:00:54 +0530

பிரதிவாதியிடம் கேட்டு வந்ததில் 1ம் பிரதிவாதி பிரிவினை செய்து கொடுப்பதாக கால அவகாசம் கேட்டு வந்தார். இதற்கிடையில் 4ம் வாதி தேமான்குளம் கிராம நிர்வாக அலுவலரிடம் தபசில் சொத்தின் பட்டா பற்றிய விபரம் கேட்டபோது 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார். தபசில் சொத்துக்குரிய பட்டாவில் மாசிலாமணியின் வாரிசுகளை சேர்த்து கூட்டு பட்டா வழங்கும்படியும் 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள தனிப்பட்டாவினை நீக்கம் செய்யும்படியும் 11.05.2020ல் ஏரல் வட்டாட்சியரிடம் 1ம் வாதி மனு கொடுத்துள்ளார். மேற்படி மனு சம்மந்தமாக வாதிகளுக்கு கூட்டுபட்டா சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 1ம் வாதி தாக்கல் செய்த WP(MD)No.14653/2020 மனுவில் உரிமையியல் நீதிமன்றம் மூலமாக தீர்வு காணும்படி கூறப்பட்டுள்ளது.

ஈ)வாதிகள் ஒன்று சேர்ந்து கடந்த 10.04.2021ல் தபசில் சொத்தினை பாகப்பிரிவினை செய்து தரும்படி கேட்டு வந்ததில் 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை செய்து தருவதாக கூறிகாலம் கடத்திக் கொண்டு போலியாக ஆவணங்கள் உற்பத்தி செய்து ஏமாற்றி வருகிறார். எனவே, தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 1/2 பாகத்தினை பிரிவினை செய்யக் கேட்டு வாதிகளால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது 06.09.2024ல் காலமாகிவிட்டார். 1ம் பிரதிவாதிக்கு கணவரான 2ம் பிரதிவாதி, மகளான 3ம் பிரதிவாதி, காலம்சென்ற மகனான பிரபாகரனின் மனைவியான 4ம் பிரதிவாதி மற்றும் மகனான 5ம் பிரதிவாதி ஆகியோர் வாரிசுகள் ஆவர். 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 5 பிரதிவாதிகள் தவிர வேறு நபர்கள் வாரிசுகள் கிடையாது.

3.<u>எதிர்வழக்குரை சுருக்கம்</u>

அ)தபசில் சொத்தான 72 செண்டில் 58 செண்ட் நிலம் 30.09.1970ம் தேதிய நன்கொடை ஆவணம் வாயிலாகவும், மீதமுள்ள 14 செண்ட் வாரிசு அடிப்படையிலும் தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டு எவ்வித வில்லங்கமுமின்றி சர்வ சுதந்திரமாக அனுபவித்து வந்தார் என்பதும், வாதிகள் மாசிலாமணியின் வாரிசுகள் என்பதும் 1ம்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:00:56 +0530

வாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் தாக்கல் செய்த W.P.MD No.14653/2020 ல் உரிமையியல் நீதிமன்றம் மூலம் தீர்வு காணும்படி கூறப்பட்டது என்பதும் உண்மையாகும். வழக்குரையில் கண்ட மற்ற சங்கதிகள் மறுக்கப்பட்டு உண்மையல்ல என்று சொல்லப்பட்டுள்ளன. வாதிகளின் வழக்கு மூலங்கள் கற்பனையானதும் பொய்யானதும் ஆகும்.

ஆ)1ம் பிரதிவாதியின் தாயாரான தேனம்மாளுக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தும் வேறு சில சொத்துக்களும் தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது. தேனம்மாளின் கணவர் யோசேப்பு தேனம்மாளுக்கு முன்னரே 1982ம் ஆண்டு இறந்துவிட்டார். தேனம்மாள் 1ம் பிரதிவாதியையும், அவரது சகோதரரான மாசிலாமணியையும் வாரிசகளாக விட்டு விட்டு 20.09.2005ல் இறந்து விட்டார். தேனம்மாள் உயிரோடு இருக்கும் காலத்திலேயே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து 20.4.2003ல் சாட்சிகள் முன்னிலையில் ஒரு உயில் சாசனம் பிறப்பித்து வைத்துள்ளார். தேனம்மாளின் இறப்புக்குப் பின்னர் 20.4.2003ல் அவர் பிறப்பித்து வைத்த உயில் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டது.

இ)தேனம்மாள் 20.4.2003ல் பிறப்பித்து வைத்த உயிலில் அவரது ஆயுள் காலத்திற்கு பின்னர் 1ம் தபசில் சொத்தாக குறிப்பிட்டுள்ள நாசரேத் பேரூராட்சி கதவு எண்.34 வீட்டை 1ம் வாதி அடைந்து அனுபவித்து கொள்ள வேண்டும் என்றும், 1ம் வாதியின் காலத்திற்கு பின்னர் 4 வது வாதி அடைந்து அனுபவித்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உயிலில் தபசில் சொத்தும் உயிலில் விடுப்பட்ட சொத்துக்களும் 1ம் பிரதிவாதி அடைந்து அனுபவித்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தேனம்மாள் 20.04.2003ம் தேதி பிறப்பித்து வைத்த உயிலின்படி தபசில் சொத்தினை 1ம் பிரதிவாதி அடைந்து, பட்டா பெற்று, தீர்வை செலுத்தி சர்வ சுதந்திர பாத்தியமாய் அனுபவித்து வருகிறார்.

ஈ) தபசில் சொத்தில் வாதிகளுக்கு பாத்தியமோ, உரிமையோ, அனுபவமோ கிடையாது. தபசில் சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகும். வாதிகளுக்கு எவ்வித பாக



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:00 +0530

உரிமையும் கிடைக்கக்கூடியதல்ல. வாதிகள் நாசரேத் பேரூராட்சி, ஆசீர்வாதபுரம், இம்மானுவேல் தெருவில் உள்ள கதவு எண்.34ல் உள்ள வீட்டை வழக்குரையில் சேர்க்காததால் வாதிகளின் வழக்கு பகுதி பாகப்பிரிவினை என்ற தோஷத்திற்கு உட்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**எழுவினாக்கள்**

4.1 வழக்குரை, எதிர் வழக்குரைகள் மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 17.02.2022ம் தேதி வனையப்பட்ட எழுவினாக்களின் தமிழாக்கம்

1. தபசில் சொத்தில் வாதிகள் கோரியுள்ள 1/2 பாகம் கிடைக்கத்தக்கதா?
2. வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் யாது?

**4.2 திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்**

17.02.2022ம் தேதிய எழுவினாக்கள் சரிவர வனையப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதியதன் பேரில் அவைகள் நீக்கறவு செய்யப்பட்டு 01.06.2026ம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. தபசில் சொத்து உபயவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகின்றதா?
2. தபசில் சொத்தில் வாதிகள் கோரும் 1/2 பாகம் கிடைக்கத்தக்கதா?
3. தாவா வழக்கிற்கு தமிழ்நாடு நீதிமன்றக்கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டு சட்டம் பிரிவு 37(2)ன் படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியிருப்பது தவறானதா?
4. 1ம் பிரதிவாதியின் தாயார் தேனம்மாள் 20.04.2003ம் தேதி உயில் எழுதி வைத்துள்ளார் என்பது உண்மையா? அது ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டதா?
5. தாவா வழக்கு பகுதிப்பாகப்பிரிவினையால் பாதிக்கப்பட்டுள்ளதா?
6. வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் யாது?

4.3 மேற்படி திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள் தொடர்பாக இருதரப்பிலும் ஏற்கனவே போதிய சாட்சியம் முன்னிடப்பட்டிருந்ததாலும், இருதரப்பிலும் மேற்கொண்டு சாட்சியம் இருப்பதாக தெரிவிக்காததாலும், வாத உரை நிகழ்த்தியதாலும் மேற்கொண்டு சாட்சியம் முன்னிட வேண்டிய அவசியம் எழவில்லை.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:04 +0530

5. வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி பி.சா.1 ஆகவும், 3ம் பிரதிவாதி பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்களுக்கான தீர்வு</u>**

6. தாவா வழக்கானது தேமான்குளம் கிராமம், அயன் நஞ்சை சர்வே எண்.816/1ல் 72 செண்டு விஸ்தீரணத்தில் அமைந்துள்ள நஞ்சை நிலமான தபசில் சொத்தில் வாதிகளின் 1/2 பாகத்தினை பிரித்து வழங்க பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 72 செண்டு சொத்தில் 58 செண்ட் நிலம் தேனம்மாள் என்பவருக்கு 30.09.1970ம் தேதிய நன்கொடை ஆவணம் வாயிலாகவும், மீதமுள்ள 14 செண்ட் வாரிசு அடிப்படையிலும் பாத்தியப்பட்டதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சங்கதி உண்மை என்று பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

7. மேற்படி தேனம்மாள் அவரது மகனான மாசிலாமணி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோரை வாரிசாக விட்டு விட்டு எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 20.09.2005ம் தேதி இறந்துவிட்டதாகவும், தேனம்மாளின் கணவர் யோசேப்பு 1984ம் ஆண்டு இறந்து விட்டதாகவும் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. தேனம்மாளின் மகனான மாசிலாமணி அவரது மனைவியான 1ம் வாதி, மக்களான 2 முதல் 4 வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 05.07.2000ல் இறந்துவிட்டார் என்ற சங்கதியை மறுத்துள்ள பிரதிவாதிகள் வாதிகள் மாசிலாமணியின் வாரிசுகள் உண்மை என்பதை ஒத்துக் கொண்டுள்ளனர்.

8. தேனம்மாள் தபசில் சொத்தில் 58 செண்டினை 30.09.1970ல் கிரையம் வாங்கியுள்ளார் என்று வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அசலில் இருந்து உறுதியாகிறது. மீதமுள்ள 14 செண்ட் தேனம்மாளுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது என்ற சங்கதியினை பிரதிவாதிகள் மறுக்கவில்லை. ஆகவே, தபசில் சொத்து



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:08 +0530

தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதில் உபயதரப்பினர்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. தேனம்மாள் கடந்த 20.09.2005ம் இறந்துவிட்டார் என்று வா.சா.ஆ.2 இறப்பு சான்றிதழ் உறுதிப்படுத்துகிறது. தேனம்மாளின் மகனான மாசிலாமணி 05.07.2000ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்றும் வா.சா.ஆ.4 மாசிலாமணியின் வாரிசு சான்றிதழில் இருந்து உறுதியாகிறது.

9.தபசில் சொத்தானது தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்ற நிலையில் தேனம்மாள் தபசில் சொத்து மற்றும் நாசரேத் பேரூராட்சி, ஆசிர்வாதபுரம், இமானுவேல் தெருவில் உள்ள கதவு எண்.34 கொண்ட வீடு ஆகியவற்றை பொறுத்து 20.04.2003ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அதன்படி தபசில் சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், கதவு எண்.34 கொண்ட வீட்டை 1ம் வாதி அவரது காலம் வரை அனுபவித்து கொள்ள வேண்டும் என்றும், அவரது காலத்திற்குப் பிறகு 4ம் வாதி அனுபவித்துக் கொள்ள வேண்டும் என்றும் மேற்படி உயிலில் சொல்லப்பட்டுள்ளது என்பதும் பிரதிவாதிகள் தரப்பு கட்சியாகும்.

10.ஆரம்பத்தில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்யப்பட்டிருந்த அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி வழக்கிடை காலத்தில் இறந்ததை தொடர்ந்து அவரது வாரிசுகள் மனுவின் பேரில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் குறிப்பிடும் 20.04.2003ம் தேதிய உயில் ஆவணமானது பி.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 உயில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உயிலினை யார் தட்டச்சு செய்தார் என்பது குறித்து அதில் சொல்லப்படவில்லை. பி.சா.ஆ.1 உயிலில் கண்ட சாட்சிகள் பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. அதற்கான காரணமும் விளக்கமும் பிரதிவாதிகள் தரப்பில் இல்லை. பி.சா.ஆ.1 உயில் ஆனது இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68 மற்றும் இந்திய வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 63ல் கண்ட வகை முறைகளுக்கு இணங்க



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:11 +0530

நிரூபிக்கப்படவில்லை. தபசில் சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.3 ஆகவும், வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

11.தபசில் சொத்தினை பிரதிவாதி தேனம்மாளுக்கு எழுதி வைத்ததாக சொல்லும் உயில் ஆவணமானது பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படாத நிலையில், பி.சா.ஆ.1 கணினி பட்டா தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்த எந்த உரிமையையும் வழங்கி விடாது. இந்நிலையில் தபசில் சொத்தினைப் பொறுத்து தேனம்மாள் எவ்வித உயிலும் எழுதாமல் இறந்துவிட்டார் என்று நிரூபணமாகிறது. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பி.சா.ஆ.3 பட்டாவினை ரத்து செய்து 1ம் வாதியின் பெயரை சேர்த்து கூட்டுப்பட்டா வழங்கக் கோரி 1ம் வாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் WP(MD)No.14653/2020 தாக்கல் செய்திருந்துள்ளார்.

12.மேற்படி நீதிப்பேராணை மனுவானது உரிய உரிமையியல் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு 17.12.2020ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று வா.சா.ஆ.5 நீதிப்பேராணை மனு உத்தரவின் பேரிலிருந்து தெரிய வருகிறது. மேற்படி உத்தரவானது பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, தாவா வழக்கானது தபசில் சொத்தில் வாதிகளின் 1/2 பாகத்தினை பிரித்து வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி பெயரில் தபசில் சொத்திற்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கான உரிய ஆவணங்கள் இல்லாத நிலையிலும், பி.சா.ஆ.1 நிரூபிக்கப்படாத நிலையிலும் பி.சா.ஆ.3 பட்டாவானது பிரதிவாதிகளுக்கு தபசில் சொத்தில் தனிப்பட்ட எந்த உரிமை மூலத்தையும் ஏற்படுத்தாது.

13.தபசில் சொத்தினைப் பொறுத்து தேனம்மாள் உயில் எழுதி வைத்ததாக பிரதிவாதிகள் சொல்லியுள்ள சங்கதி நிரூபணம் செய்யப்படாத நிலையில் தபசில் சொத்து தேனம்மாளின் வாரிசுகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருவதாகத் தான் சட்டப்படி அனுமானிக்க முடியும். இந்நிலையில், தேனம்மாளின் வாரிசுகளுக்கு அதில்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:14 +0530

பாகம் உள்ளது என்பதை சொல்லத் தேவையில்லை. இறந்து போன தேனம்மாளுக்கு 1ம் வாதியின் கணவரும், 2 முதல் 4 வாதிகளின் தந்தையுமான மாசிலாமணி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் மட்டுமே வாரிசுகள் என்பதில் எந்த பிரச்சனையும் இல்லை. ஏனெனில், தேனம்மாளின் கணவர் யோசேப்பு 1984ம் ஆண்டே தேனம்மாளுக்கு முன்பு இறந்துவிட்டார்.

14.ஆகவே, தபசில் சொத்தில் மாசிலாமணி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு தலா 1/2 பாகம் கிடைக்கத்தக்கதாக உள்ளது. மாசிலாமணி மற்றும் 1ம் பிரதிவாதி எந்தவித உயிலும் எழுதி வைக்காமல் இறந்துவிட்ட நிலையில் மாசிலாமணியின் 1/2 பாகம் வாதிகளுக்கும், 1ம் வாதியின் 1/2 பாகம் அவரது வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் போய் சேரும். ஆனால், பிரதிவாதிகள் தரப்பில் தாவா வழக்கானது பகுதி பாகப்பிரிவினையால் பாதிக்கப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது. அதாவது, நாசரேத் பேரூராட்சி, ஆசிர்வாதபுரம், இம்மானுவேல் தெருவில் உள்ள கதவு எண்.34 கொண்ட வீட்டை வாதிகள் தாவா வழக்கில் சேர்க்காததால் தாவா வழக்கு பகுதிப் பாகப்பிரிவினையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஆகும்.

15.வாதிகள் தரப்பில் மேற்படி கதவு எண்.34 கொண்ட வீட்டிற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் தாவா வழக்கானது பகுதி பாகப்பிரிவினையால் பாதிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது என்று வாதிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ன் குறுக்கு விசாரணையில், "**வீடை என் மாமனார் எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்தால் என் மாமனார் மாமியாருக்கு பாத்தியப்பட்ட எல்லா சொத்துக்களையும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும்வீடும் தேனம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு பாத்தியப்பட்டது. தேனம்மாளுக்கு பாத்தியப்பட்ட எல்லா சொத்துக்களையும் சேர்க்காததால் இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால்**



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:17 +0530

**சரியல்ல**." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

16.மேற்படி வா.சா.1ன் சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்கையில், நாசரேத்தில் வசித்து வரும் 1ம் வாதி அவரது மாமனார் யோசேப்புக்கு பாத்தியப்பட்ட வீட்டில் தான் 1ம் வாதி வசித்து வருகிறார் என்றும், அதனை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றும், அந்த வீட்டினைப் பொறுத்து 1ம் வாதிக்கு அவரது மாமனார் எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் தெள்ளத் தெளிவாக நிரூபணமாகிறது. ஒப்புக் கொண்ட சங்கதிகளை நிரூபிக்க தேவையில்லை என்று இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 58 கூறுகிறது. மேற்படி யோசேப்பு அவரது மனைவியான தேனம்மாளுக்கு முன்பே எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்ட நிலையில் அதில் கிறிஸ்தவரான தேனம்மாளுக்கு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் பாகமும், உரிமையும் வந்தடையும் என்பதை சொல்லத் தேவையில்லை.

17.பிரதிவாதிகள் குறிப்பிடும் கதவு எண்.34 கொண்ட வீட்டிற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனினும், 1ம் வாதி அவரது குறுக்கு விசாரணையில் அவர் குடியிருந்து வரும் அவரது மாமனாருக்கு பாத்தியப்பட்ட வீட்டினை சேர்க்கவில்லை என்று தெளிவாக ஒப்புக் கொண்டுள்ளார். வாதிகள் குடியிருக்கும் வீட்டை வழக்கில் சேர்க்காமல் ஒதுக்கி விட்டு தபசில் சொத்தில் மட்டும் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரியுள்ளனர். மேற்படி வீட்டினைப் பொறுத்து தேனம்மாள் எந்த ஆவணமும் எழுதி வைத்ததாக நிரூபணமாகாத நிலையில் அதில் தேனம்மாளின் வாரிசுகள் அனைவருக்கும் பாகம் உண்டு.

18.மாறுபாடான எந்த சாட்சியமும் இல்லாத நிலையில் வாதிகள் குடியிருந்து வரும் தேனம்மாளுக்கு பாத்தியப்பட்ட வீடானது தேனம்மாளின் பாகத்தை பொறுத்து அவரது வாரிசுகளின் கூட்டனுபவத்தில் இருந்து வருவதாக தான் சட்டப்படி எடுத்துக் கொள்ள முடியும். தேனம்மாளுக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கி வாதிகள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யாததால் தாவா வழக்கானது பகுதி பாகப்பிரிவினை என்னும் தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:21 +0530

19.தாவா வழக்கானது, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டு சட்டம் பிரிவு 37(2)ன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. தாவா வழக்கானது உபயவாதிகளின் கூட்டுடமையில் இருந்து வருவதாக வாதிகள் சங்கதி முன்னிட்டு அதன்படி நீதிமன்ற கட்டண செலுத்தியுள்ளனர். வருவாய்துறையில் 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா பெயர் மாறியுள்ளது மட்டுமே தபசில் சொத்து பிரதிவாதிகளின் தனித்த அனுபவத்தில் இருந்து வருவதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க சாட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாது. தேனம்மாளுக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தினைப் பொறுத்து 1ம் பிரதிவாதி கூறும் பி.சா.ஆ.1 உயில் நிரூபணமாகாத நிலையில் அது ஊர்ஜிதத்திற்கு வந்ததாக எடுத்துக் கொள்ள முடியாது.

20.இத்தகு சூழ்நிலையில் தபசில் சொத்தானது தேனம்மாளின் வாரிசுகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருவதாகத் தான் சட்டப்படி தீர்மானிக்க முடியும். ஆகவே, தாவா வழக்கிற்கு மேற்படி சட்டத்தின் பிரிவு 37(2)ன் கீழ் நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளது சரியானது என்று இந்நீதிமன்றம் எழுவினா3க்கு தீர்வு காண்கிறது. மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில் தபசில் சொத்தானது உபயவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்று எழுவினா1க்கும், அதில் வாதிகளுக்கு 1/2 பாகம் உள்ளது என்று எழுவினா2க்கும், 20.04.2003ம் தேதி 1ம் பிரதிவாதியின் தாயார் உயில் எழுதி வைத்தார் என்று நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே, அது ஊர்ஜிதத்திற்கு வரவில்லை எனவும், எழுவினா4க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

21.வாதிகள் தேனம்மாளின் கணவரான யோசேப்பின் வீட்டில் குடியிருந்து வருவதை ஒத்துக் கொண்ட பிறகும் அதில் தேனம்மாளுக்கு பாகம் உண்டு என்பதை தெரிந்த பிறகும் அதனை வழக்கில் சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்று வாதம் செய்துள்ளனர். வாதிகளுக்கு அனுகூலமான வீட்டினை வைத்துக் கொண்டு தபசில் சொத்தினைப் பொறுத்து மட்டும் பாகம் கோரியுள்ளதால் தாவா வழக்கானது பகுதிப் பாகப்பிரிவினையால்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:23 +0530

பாதிக்கப்பட்டுள்ளது என்று எழுவினா5 க்கும், வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் எதுவும் இல்லை என்று எழுவினா6 க்கும் தீர்வு காணப்படுகிறது.

22. **முடிவாக,**

**தாவா வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 08 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:

வா.சா.1–பொன்னம்மாள்

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 30.09.1970 | தேனம்மாள் பெயருக்கு ஆபிரகாம், ஆல்பர்ட், மாணிக்கம், முத்தையா ஆகியோர் எழுதிக் கொடுத்த நன்கொடை பத்திரம் அசல் |
| 2. | வா.சா.ஆ.2 | 20.09.2005 | தேனம்மாள் இறப்பு சான்றிதழ் |
| 3. | வா.சா.ஆ.3 | – | தாவா சொத்திற்குரிய கணினி வழி பட்டா |
| 4. | வா.சா.ஆ.4 | 20.10.2000 | மாசிலாமணியின் வாரிசு சான்றிதழ் |
| 5. | வா.சா.ஆ.5 | 17.12.2020 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதி பேராணை மனு எண்.14653/2020 க்குரிய உத்தரவு இணையவழி நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>

பி.சா.1–கோயில்பிள்ளை
பி.சா.2–கிறிஸ்டி



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:31 +0530

TNTT080002062021

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | பி.சா.ஆ.1 | 20.04.2003 | தேனம்மாள் எழுதி வைத்த உயில் சாசனம் அசல் |
| 2. | பி.சா.ஆ.2 | 17.02.2020 | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதி பேராணை மனு எண்.14653/2020 ன் உத்தரவு கணினி வழி பதிவிறக்கம் செய்யப்பட்டது. |
| 3. | பி.சா.ஆ.3 | – | தாவா சொத்திற்கு 2ம் பிரதிவாதியின் மனைவி பெயரில் உள்ள கணினி பட்டா. |

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 19:01:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

TNTT080002062021

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
ஸ்ரீவைகுண்டம்.
வரைவு/சீரான – தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.136/2021
நாள்.08.06.2026